DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
E.P No. 82/2023 in ARB NO. 591/2014
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : சுரேந்திரன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 10.07.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இம்மனுவின் மனுதார் நிறுவன அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். நான் மனுதார் தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். ARB NO. 591/2014 என்ற மனுவின் உத்தரவு ம.சாஆ.1 ஆகும்.

**1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதார் TN 72 Q 1192 என்ற வாகனத்தினை எங்கள் நிறுவனத்தில் கடனாக பெற்றதை வசூலிக்க வேண்டி இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். முதல் விசாரணையில் 1ம் எதிர்மனுதார் TN 76 D 5540 என்ற டாடா இண்டிகா V2B என்ற வாகனத்திற்கும் ஒரே நேரத்தில் கடன் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி இரண்டு வாகனத்தில் எந்த வாகனத்திற்கு முதன்முதலாக கடன் பெற்றார் எனவும், 2 வதாக எந்த வாகனத்திற்கு கடன் பெற்றார் என தெரியுமா என்றால் தற்போது என்னால் கூற இயலாது. ஆவணங்களை பார்த்து தான் கூறமுடியும். 2 ம் எதிர்மனுதார் வாகனத்திற்கு சாட்சி (ஜாமீன்தார்) கையொப்பம் செய்தவர் தான் என்றால் சரிதான். இந்த நிறைவேற்று மனுவில் கண்ட வாகனத்தினை 1 ம் எதிர்மனுதார்க்கு ரூ.1,50,000/−த்திற்கு கடன் வழங்கினோம். மேற்படி வாகனத்திற்கு எத்தனை தவணை செலுத்தியுள்ளார் என்றால் ஒரு தவணை தான் செலுத்தியுள்ளார். மேற்படி வாகனத்தை கைப்பற்றி பொது ஏலத்திற்கு விற்றுவிட்டோம். மேற்படி வாகனத்தினை விற்ற தொகை எவ்வளவு என்றால் 60 ஆயிரத்திற்கு ஏலம் விடப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கு ஏலம் 60 ஆயிரம் விற்று எடுத்துக்கொண்டோம் என்றாலும், அவர் தவணை தொகைகளை கொடுத்துவிட்டார் என்றாலும், மேற்படி ம.சா.ஆ.1 ன் படி 1 ம் எதிர்மனுதார் தோன்றா தரப்பினராகிவிட்டதினால் அதை பயன்படுத்தி அவரிடம் பணம் பறிக்கும்நோக்கத்தில் இம்மனுவினை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரிடம் கடன் கொடுக்கும்போது அவரிடம் பணத்தினை பூர்த்தி செய்யாமல் காசோலை பெறும் நடைமுறை உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பூர்த்திசெய்யாமல் உள்ள காசோலையை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 1 ம் எதிர்மனுதார் மீது வழக்கு தாக்கல் செய்து அதை மேற்படி வழக்கில் அவர் செலுத்தி அந்த வழக்கை வாபஸ் பெற்றுவிட்டு, தற்போது இம்மனுவினை பொய்யாக தாக்்ல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் உள்ள வட்டிவிகிதம் சட்டத்திற்கு புறம்பான அதிகப்படியான வட்டி என்பதால் பரிகாரம் நான் கோரும் பரிகாரம்கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதார் எங்களிடம் கடன் பெற்ற தொகையை செலுத்திவிட்டார் என்றாலும், மேற்படி ஏலத்தின் மூலம் கடன் தொகையை பெற்றுவிட்டீர்கள் என்றாலும்,

காசோலையின் பேரிலும் கடனை 1ம் எதிர்மனுதார் செலுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதார் ஜாமீன்தார் கையொப்பம் மட்டும் செய்ததால் அவரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எதிர்மனுதார்களை எதிராக இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**